بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 25-04-2014

# GAMBLING IS A DEMONIC ACT

# சூதாட்டம் ஒரு சாத்தானிக செயலாகும்

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

அனைத்து மக்களுக்கும் சலாம் தெரிவித்தபிறகு தஷஹ்ஹுத்தும் தஅவ்வுசும் சூரா:ஃபாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

சூதாட்டம் அசாதரணமான நிலையில் எங்கும் பரவியுள்ளது. எல்லா வழிகளிலும் தீங்கு ஏற்படுத்திக்கொண்டு சூதாட்டம் அதன் ஆற்றல்களுடன் முன்னேற்றம் தொடர்கின்றது. எல்லா இராஜியங்களிலும் எல்லா மத நம்பிக்கையாளர்களிலும் இத்தீயச்செயல் காணலாம். முஸ்லீம்கள் என்று உரிமைகோருவோர்களும் இச்செயலுக்கு அப்பார்பட்டவர்களல்ல. அவர்களும் இந்த சாத்தானின் ஈர்ப்புத்தன்மையில் வீழ்ந்துவிட்டனர். அதனால் அல்லாஹ்வில் இருந்துள்ள அபாயங்கள் உங்களை பிடிப்பதற்கு முன்னவே சூதாட்டம் என்ற இந்த தீயசெயல் செய்வதில் இருந்து முழுமையாக விலகிக்கொள்ளுங்கள்.

இறை கட்டளைகளால் உருவானதும் அந்த இறை கட்டளைகளுக்கு கீழ்பணிந்து வாழ்ந்துக்கொள்ளவும் தேவைப்படுகின்ற மார்க்கமாகும் இஸ்லாம். அந்த இறை கட்டளைகள் நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமின்றி மனிதகுலத்திற்கு அனைத்தும் தேவையானதாகும். மனித வாழ்விற்கு தேவையான அனைத்தும் உழைப்பால் பெற்றுக்கொள்ள இஸ்லாம் கூறுகின்றது. மட்டுமின்றி அது பெற்றுக் கொள்வது நியாயமான முறையில் ஆகவேண்டுமென அது வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. சூதாட்டத்தை போன்றே அபாயமான விஷயங்களில் பட்டதாகும் லாட்டரி, குதிரைப்போட்டி, ஹவ்ஸ்போல்ட், பாஸ்க்கட்டான்ஸ், சங்கீதம், லோட்டோ போன்றவைகள். இவையனைத்தும் மனிதர்களின் உழைப்பிற்கு பதிலாக அவர்களின் பாக்கிய பரிசோதனையின்பால் தூண்டிக் கொள்கின்றது. உழைப்பும் முயற்சியுமின்றி பணம் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற தவறான எண்ணங்களை அவர்களில் அது உருவாக்கிக்கொள்கின்றது. அவ்வாறு சேர்த்திடும் பணம் உழைப்பின்றி அநியாயமாக பெற்றுக்கொண்டதேயாகும். அதுவழி ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு உழைத்து பணம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற இறைதத்துவத்தை அவமதிப்பதாகும். அழகாக உழைப்பை மேற்கொள்ள போதிக்கின்ற ஒரு மதமேயாகும் இஸ்லாம். எல்லா ஒவ்வொரு விஷயத்திற்கும் அதற்கேற்ற வழி அது கூறிக்கொள்கின்றது. மற்றவர்களின் செல்வம் நமக்கு நியாயமானதல்ல என்று அது நம்மை கற்பிக்கின்றது.

நியாயமான வழிகளிலல்லாமல் எதையும் பெற்றுக்கொள்ள இஸ்லாம் அனுமதியளிக்கவில்லை. ஏனையவர்களில் இருந்து எதாவது கைவசப்படுத்திக் கொள்கின்றீர்கள் என்றால் அவர்களின் சம்மதவும் அனுவாதவும் தேவையானதாகும். சூதாட்டம் என்பது தவறான முறையில் மற்று மக்களின் பணத்தை பிடித்து பறித்துக் கொள்வதேயாகும். திருகுர்ஆன் மூலம் இதற்கு அல்லாஹ் தடை ஏற்படுத்தியுள்ளான்.

**“உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். மேலும் நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களில் இருந்து ஒரு பகுதியையும் அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (லஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்”** (1-189).

**“நம்பிக்கைக்கொண்டோரே! மதுபானமும் சூதாட்டமும் கற்சிலைகளை வழிபடுதலும் அம்புகள் எறிந்து குறிகேட்பதும், சாத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் அவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக சாத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டுபண்ணி அல்லாஹ்வின் நினைவில் இருந்தும் தொழுகையில் இருந்தும் உங்களை தடுத்துவிடத்தான். எனவே அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா?”** (5:9,12).

ஹஸ்ரத் முஹமது முஸ்தபா(ஸல்) கூறியதாக காணலாம். **“அல்லாஹ் வீஞ்ச், சூதாட்டம் மற்றும் போதை மருந்துகள் இவைகளுக்கு தடை ஏற்படுத்தியுள்ளான்”.**

பௌதீகத் துறைகளிலானாலும் சரி, ஆன்மீக துறைகளிலானாலும் சரி, சூதாட்டம் மிகபெரும் நாசம் விளைவிக்கின்றதேயாகும்.

**சூதாட்டம் ஆன்மீக துறைகளில் உருவாக்கும் தீங்குகள்**

1. அல்லாஹ்வின் கோபத்தையும் தண்டனையேயும் அழைத்துக்கொள்ளும் பெரிய பாவம்.

2. திருகுர்ஆனில் 5-ம் அதிகாரத்தில் 91-ம் வசனத்தில் சீர்க்குக்கு பிறகு கூறப்படும் மிக கௌரவம் வாய்ந்த விஷயம்.

3. அசுத்தவும் அழுக்கும் நிறைந்ததால் அல்லாஹ் இதை நெறிகேடாக காண்கின்றான்.

4. சூதாட்டம் ஒரு சாத்தானிக செயலாகும். சாத்தான் மனிதனின் பகைவன் என்பதில் சந்தேகமில்லை. அவன் மனிதனை வழிதவற செய்வதாக சபதம் செய்துள்ளான். ஆகவே அந்த சாத்தானின் செயல் அவனை அக்கினியின்பால் தள்ளிவிடுகிறது.

5. சூதாட்டம் மனிதனின் அனுதின முன்னேற்றத்திற்கு தடை ஏற்படுத்துகின்றது. இரவும் பகலும் அவன் மீது அல்லாஹ்வின் கோபம் இறங்குகின்றது.

6. இறை எண்ணத்தில் இருந்தும் பிரார்த்தனையில் இருந்தும் தனது மற்று செயல்களில் இருந்தும் சூதாட்டம் அவனை தடம்மாற்றிக்கொள்கின்றது.

7. சூதாட்டம் நெருப்பை புசித்துக்கொள்ள அவனை தூண்டிக்கொள்கின்றது. அவன் மற்றவர்களின் பால் திரும்பிக்கொள்கின்றபோது அவர்களும் நெருப்பை புசித்திட ஆளாகி விடுகின்றார்கள்.

**சூதாட்டம் பௌதீக வாழ்க்கையில் உருவாக்குகின்ற தீங்குகள்**

1. பகைமை, பொறாமை, வெறுப்பு போன்றவைகளை உருவாக்குகின்றது.

2. மக்கள் ஒன்றுக்கொன்று சண்டைகளிலும், அக்கிரமத்திலும் எட்டுகின்றார்கள். தொடர்ந்து இரத்தம் சிந்திக்கொள்வதிலும் பெரிய தவறுகள் செய்வதிலும் அவர்களை தள்ளிக்கொள்கின்றது.

3. மக்கள் சோம்பேறியாக மாறுகின்றார்கள். நேர்மையான வழியில் உழைப்பதில் இருந்தும் வேலை செய்வதில் இருந்தும் அவர்களை பின் திருப்பிக்கொள்கின்றது. சூதாட்டம் வழியாக திடீரென பணக்காரனாகி விடலாம் என்ற சிந்தைக்கு ஊக்குவிக்கின்றது. சூதாட்டம் மட்டும் போதும் அனைத்தையும் வென்றுவிடலாம் என்று எண்ணம் முளைக்கின்றது.

4. வாழ்க்கையின் நல்லொழுக்க குணங்களில் இருந்து மக்களை அகற்றிக்கொள்வதும் முடிவில் அது அவர்களை தற்கொலையின்பால் ஈர்த்துக்கொள்ளவும் செய்கின்றது..

5. மக்களை திருட்டின்பால் எட்டவைக்கின்றது. சூதாட்டம் மூலம் பணத்தை இழந்துக்கொள்ளவும், பிறகு பணம் இல்லாமல் வரும்போது திருடிக்கொள்ள அவர்களை தூண்டிக்கொள்கின்றது.

6. சூதாட்டத்தில் விளைவு ஒவ்வொரு தினம் தாண்டிக்கொள்ளும்போது மக்களை வறுமையாளராக பரிணமிக்க செய்கின்றது. அப்படி அவர்களின் வாழ்க்கை மிக மோசமாக மாறிவிடுகின்றது.

7. வட்டிக்கு பணம் வாங்கி சூதாடி அவர்கள் கடனாளிகளாக மாறுகின்றனர்.

முஸ்லீம் சகோதர சகோதரிகளே, நமது சமுதாயத்தை சூதாட்டம் அழித்துக்கொள்கின்றது. குதிரைப் போட்டியும், லாட்டறியும் அவ்வாறு மனிதனை அழித்துக்கொள்கின்ற எல்லாவிதமான விளையாட்டுகளுக்கும் சமூகம் ஊக்குவிப்பு வழங்குகின்றது. அது நம் நாட்டிற்கு அவமானமாக மாறியுள்ளது. நமது நாட்டினுடையவும் சமூகத்தினுடையவும் மோசமான முகம் ஆகும் இதுமூலமாக திறந்திருப்பது. குறிப்பாக முஸ்லீம்கள் சாத்தானின் பிடியின் பால் அகப்பட்டுவிட்டதை பார்க்கும் போது வருத்தம் வருகின்றது. ஏனையவர்களுக்கு முன்மாதிரிகையாக திகழ வேண்டிய அவன் இப்போது தீன்மையின் பால் சென்றிருக்கின்றான். ஒரு உண்மையான முஸ்லீம் திருகுர்ஆனின் போதனைகளின் அடிப்படையில் செயல்பட வேண்டும். இறைதூதர்களுக்கு கிடைக்கின்ற கட்டளைகளை பின்பற்றிக்கொள்ள அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளான்.

**“தூதர்களே நல்ல பொருட்களில் இருந்து நீங்கள் உண்ணுங்கள். நல்லசெயல்களை செய்யுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன்”** (23:52).

நீங்கள் எங்குச் சென்றாலும், எல்லா பகுதிகளிலும் உங்களின் செல்வங்களை இழப்பதற்கான வழிகள் இருக்கின்றது. நியாயமான வழியாக கிடைக்கும் சிறிதளவிலான செல்வம், அநியாயமான வழிகளிலும் சூதாட்டம் மூலவும் கிடைக்கின்ற பெரும் அளவிலான செல்வத்தைவிட ஆயிரம் மடங்கு சிறந்ததாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்,
**“தீயவை அதிகமாகவே இருப்பது உம்மை ஆச்சரியப்படுத்திய போதிலும், தீயதும் நல்லதும் சமமாகுவதில்லை. எனவே, அறிவாளிகளே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள் நீங்கள் வெற்றியடைவீர்கள்.”** (5-101)

மௌரிஷியாவிலும் மற்று உலகநாடுகளிலும் அமைந்துள்ள அரசியல் கட்சிகள் மக்களின் அழிவிற்காக செயல்பட்டுவருகின்றர்கள். இந்த விபத்தில் அகப்பட்டுவிட்ட சில முஸ்லீம்களையும் நம்மால் பார்க்க முடியும். அது வழியாக அவர்களுக்கு சில உதவிகள் கிடைக்கின்றது. உண்மையை கூற தயங்காமல் இருக்க வேண்டும். சூதாட்டம் வழியாகவும் லாட்டறி மூலமாகவும் வென்ற பணம் தேவையில்லை என்று கூறிக்கொள்ள வேண்டும். உண்மையை கூறிக்கொள்ள தயங்க வேண்டாம். தவறான வழிகளில் இருந்து உங்களின் சகோதரர்களை காப்பாற்றிக்கொள்ளுங்கள். எனது பிரியமான சகோதர சகோதரிகளே பாவமன்னிப்பு கூறி பின் திரும்பிக்கொள்வதற்கான சமயம் முடிந்துவிடவில்லை. உங்களின் நன்மைக்காக அல்லாஹ் திறந்து தந்திருக்கின்ற பாதையின் பால் திரும்புங்கள். அப்போது இரு உலகிலும் மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பீர்கள். அல்லாஹ்விக்கு அஞ்சுங்கள். நரக அக்கினியில் இரையாக்குவதில் இருந்து விலகுங்கள்.

தீமைக்கு எதிராக போராட்டம் மேற்கொள்ள அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக. உண்மை, பொய்மைக்கு மேல் வெற்றியடைய அவன் உதவிபுரிவானாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
*Sadr Sahibul Faraj*
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**